**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

-----

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No. 58 of 2020**

**Deposition of witness for** : **PW20**

**Name** : **R.Murali**

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 17.02.2019 ம் தேதியில் பொறுப்பு கோட்டப்பட்டி காவல் நிலைய வட்ட ஆய்வாளராக இருந்த போது கோட்டப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் திரு.சுசில் என்பவர் கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 20/2019 சட்ட பிரிவுகள் 379,ஈ.தா.சா. மற்றும் 27( 1) Arms Act பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தது அன்றைய தினத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான திருவண்ணாமலை to அரூர் அமைந்துள்ள எம்.ஜீ.ஆர்.நகர் பஸ் நிருத்தம் அருகே சென்று சாட்சி கணேசன் அடையாளம் காட்ட குமார் , பச்சையப்பன் முன்னிலையில் மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்து

சம்பவ இடத்தில் இருந்த காலி கேஸ் ஒன்று புல்லட் ஒன்று எடுத்தேன். அத்துடன் உடைந்த நிலையில் உள்ள நம்பர் பிலேட் எடுத்தேன். அதை ஆன்லைன் மூலமாக ஆய்வு செய்தபோது அது பஜார் பல்சர் என்றும் அதன் முகவரி கோவிந்தம்மாள் க/ பெ ராகேஸ்வரன் ரெட்டிப்பட்டி உத்தங்கரை வட்டம் , கிருஷ்ணகிரி மாவட்டம் என இருந்தது. மேற்படி முகவரிக்கு 18.02.2019 தேதி அதிகாலை 4.00 மணிக்கு முகவரியில் சென்று விசாரித்த போது அந்த முகவரியில் பரதன் த/பெ நாகேஸ்வரன் என்பவர் குடியிருந்து வருவதாகவும் அவரை விசாரித்தபோது தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு அவரும் அவரது நண்பரும் வெங்கட் (எ) வெங்கடேசன் த/பெ சின்னகண்ணு கலைஞர் நகர் ஊத்தங்கரை சேர்ந்து தான் இக்குற்றத்தை செய்ததாகும். இது மட்டும் அல்லாமல் ஊத்தங்கரையில் ஒரு நாட்டு துப்பாக்கியை வைத்து மதுபானம் கடையில் இருந்து வியாபாரம் முடித்து வந்தவரிடம் துப்பாக்கியை காட்டி மிரட்டி பணத்தை கொள்ளையடித்ததாகவும், அதன் பின்பு அந்த பணத்தை வைத்து கை துப்பாக்கி ஒன்று வாங்கியதாகவும், அந்த கை துப்பாக்கி எடுத்துக்கொண்டு திருவண்ணாமலை மாவட்டம், ஒரு மதுபான விற்பனை கடையை மூடிவிட்டு அந்த நபரிடம் பணத்தை பரிக்கும்போது அவரிடம் பணம் ஏதும் இல்லை என்னும், அதன் பின்னர் நரிப்பட்டியில் உள்ள டாஸ்க் மார்க் கடையை சாத்தி விட்டு வரும் சேல்ஸ்மேன் என்பவரிடம் கொள்ளை அடித்து இருவரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்கள்.

15.12.2018 ம் தேதியில் தண்ணீர் பந்தல் அருகே உள்ள ஒயின் ஸாபில் இரவு 10.30 மணிக்கு மேல் ஒயின் ஸாபை பூட்டி விட்டு பணத்தோடு சென்றவர்களை பரதன் ஆகிய தானும் வெங்கடேசனும் சிறிதுநேரம் பின் தொடர்ந்து சென்று வெங்கடேசன் துப்பாக்கியால் சுட்டு 3 இலட்சம் பணத்தை இருவரும் பறித்து கொண்டு சென்று விட்டதாக கூறியுள்ளார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்படைக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ 14 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் மீதான கோட்டப்பட்டி காவல் நிலைய வழக்கில் சான்று பொருட்களை கைப்பற்றிய பின்பு தான் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரியல்ல. பரதன் கோட்டப்பட்டி வழக்கு மற்றும் வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதை முதன் முதலில் எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் பரதனை விசாரித்தபோது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் தெரிந்து கொண்டேன்.

காலி தோட்டாக்களும் உடைந்த நம்பர் பிளேட்டும் எந்த வழக்கு சம்பந்தப்பட்டது என்றால் கோட்டப்பட்டி காவல்நிலைய வழக்கு சம்பந்தப்பட்டது. மேற்படி தோட்டா மேற்படி காவல் நிலைய வழக்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். ஊத்தங்கரை காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறும் சமயத்தில் யார் யார் சாட்சிகளாக இருந்தார்கள் என்று சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. வேறு வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது யார் யார் சாட்சிகளாக இருந்தார்கள் என்ற விவரம் சொல்ல வேண்டும் என்றால் சரிதான். எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவது பொய் என்றாலும் அவர்கள் அவ்வாறு எந்த வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. கோட்டப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 20/19 வழக்கில் எதிரிகளை சந்தேகத்தின் பேரில் வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.